1995 நவம்பர் 7]

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஒப்பற்ற முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், பழனி திருக்கோயிலுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து இன்றைக்குத் துணைக் கண்டத்திலே இல்லாத அளவுக்கு உயர் மின்னழுத்த விளக்குகளை அமைத்திருக்கிறார்கள். அதனுடைய மதிப்பு சற்றொப்ப 27 இலட்சம் ரூபாய் ஆகும். அதனுடைய திறப்பு விழா எப்போது நடைபெறும் என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி மலையில் செய்து முடிக்கப்பட்டுள்ள அந்த ஒளி விளக்குகள் இந்த மாதம் 19 ஆம் தேதி ஆரம்பிக்கப்படும் என்ற நல்ல செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

38—

அம்பத்தூர் கல்யாண மண்டபத்தை உபயோகப்படுத்துதல்

***21121**—*திரு. கோ. காளன்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூர் நகராட்சியால் கட்டப்பட்ட கல்யாண மண்டபம் மக்களுக்கு உபயோகப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்தக் கல்யாண மண்டபத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கி மக்களின் உபயோகத்திற்கு விட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) திருமண மண்டபத்தில் தேவையான வசதிகள் செய்யப்பட்டு பொதுமக்களின் உபயோகத்திற்கு வாடகைக்கு விட தற்போது தயார் நிலையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு:- ஓர் உரையில் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

TRUTH ALONE TRIUMPHS